**TNVR020005902017**

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.**
முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 08-ஆம் நாள் புதன்கிழமை
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.9/2017**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>காவல் சார்பு ஆய்வாளர்,<br>கிருஷ்ணன்கோவில் காவல் நிலையம்,<br>குற்ற எண்.17/2016 |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | அதிஷ்டக்குமார்,<br>த/பெ.வெங்கடாசலம்,<br>தாட்கோ காலனி,<br>சுந்தரபாண்டியன். |
| சம்பவம் நடந்த நாள் | | 16.01.2016 |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 16.01.2016 |
| எதிரி கைதான நாள்<br>எதிரி பிணையில் சென்ற நாள் | | 27.01.2016 அன்று முன் பிணை பெற்றுள்ளார். |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br>– | 22.06.2026<br>இல்லை |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 10.03.2017 |
| குற்றம் | | |
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது இதச பிரிவுகள் 323, 324, 506(2)–ன் கீழும், |

| | | |
|---|---|---|
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது இதச பிரிவுகள் 323, 324, 506(2)–ன் கீழ் |
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 11.06.2026 ம் தேதி முதல் விசாரணை குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.2 15.06.2026 ம் தேதி முதல் விசாரணை குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.3 15.06.2026 ம் தேதி முதல் விசாரணை குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.4 15.06.2026 ம் தேதி முதல் விசாரணை குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.5 15.06.2026 ம் தேதி முதல் விசாரணை குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.6 17.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.7 17.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.8 19.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.9 22.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை. |
| எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 24.06.2026 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனு | – | – |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, M.B.A., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.R.ராமராஜ், M.Sc., B.L., |

| | | |
|---|---|---|
| எதிரிகளின் கூற்று | – | எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது இதச பிரிவுகள் 323, 324, 506(2)–ன் கீழான குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கானது 04.02.2017 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 22.06.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, M.B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு..R.ராமராஜ், M.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கு கடந்த 16.01.2016 ம் தேதி 15.00 மணிக்கு புகார்தாரரானவர் தனது ஊருக்கு அருகில் உள்ள R–91 காலனியில் உள்ள ரேசன் கடை முன்பு நடந்து வந்த போது அவருக்கு எதிரே வந்த எதிரியானவர் புகார்தாரரைப் பார்த்து எப்ப பார்த்தாலும் ஊருக்குள் ஏதாவது பிரச்சனை பண்ணிக்கிட்டு இருக்க அப்படின்னு சொல்லி வாதியை கையால் நெஞ்சில் குத்தியும் கீழே தள்ளிவிட்டு காயப்படுத்தியும் கீழே

கிடந்த செங்கலை எடுத்து புகார்தாரரின் வலது கண்ணுக்கு கீழ் அடித்து காயப்படுத்தியும் சாட்சிகள் விலக்கியபோது எதிரியானவர் புகார்தாரரை கொலை மிரட்டல் விடுத்துச் சென்ற குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவுகள் 323, 324, 506(2)–ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று கிருஷ்ணன்கோவில் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச பிரிவு 207-ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் குறித்து வினவியபோது பொய் வழக்கு, குற்றவாளி இல்லை என்றார்கள். போதிய கால அவகாசத்திற்கு பிறகு எதிரி மீது இதச பிரிவுகள் 323, 324, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரி பொய் வழக்கு, தான் குற்றவாளி இல்லை என மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.9 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சாஆ.1 முதல் அ.சாஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–

4-(1) அ.சா.1 திரு.கணேஷ்காமு தனது சாட்சியத்தில், தான் தற்போது சுந்தரபாண்டியத்தில் குடியிருந்து வருவதாகவும், தான் வழக்கறிஞர் தொழில் செய்து வருவதாகவும், இவ்வழக்கின் எதிரியை தெரியும் என்றும், அவர் தனது ஊரை சேர்ந்தவர் என்றும், கடந்த 16.01.2016 அன்று மதியம் 03.00 மணியை போல் தான் தங்கள் ஊர் ரேசன் கடை அருகில் சென்றுகொண்டிருந்தபோது தன்னை எதிரி வழிமறித்து ஏன் எப்போது பார்த்தாலும் ஊரில் பிரச்சனை பண்ணிட்டே இருக்க என்று கூறி தன் நெஞ்சில் கையை வைத்து குத்தி கீழே தள்ளிவிட்டார் என்றும், தான் சிமெண்ட் பிளாக்கின் மீது விழுந்து விட்டதாகவும், தான் எந்திரிக்க முயற்சி செய்து கொண்டிருந்தபோது அங்கிருந்த ராமர், அவரது மகன் ஜெயராமன் மற்றும்

அவரது உறவினரான முனியப்பன் ஆகியோருடன் சேர்ந்து தன்னை தாக்கினார்கள் என்றும், அப்போது ராமர் என்பவர் அவர் கையில் வைத்திருந்த அரிவாளை எடுத்து அரிவாளை பின்புறமாக திருப்பி தனது வலது கண்ணில் அரிவாள் வைத்து அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அப்போது முனியப்பன் செங்கல்லை எடுத்து தனது முதுகில் அடித்தார் என்றும், ஜெயராம் கையில் வைத்திருந்த கம்பால் முதுகில் மாறி மாறி அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அப்போது அருகிலிருந்த ஊர்க்காரர்கள் விலக்கிவிடவும் எதிரிகள் தன்னை பார்த்து என்னைக்கினாலும் உன்ன கொல்லாமல் விடமாட்டோம் உன் சாவு தங்கள் கையில் தான் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், தான் உடனே கிருஷ்ணன்கோவில் காவல்நிலையத்திற்கு சென்று இது சம்மந்தமாக புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார்மனுவிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், புகார்மனு அசாஆ.1 என்றும், காவல் நிலையத்தில் காயம்பட்ட தன்னை மருத்துவ நமுனா கொடுத்து திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(2) அ.சா.2 திரு.ராமர் தனது சாட்சியத்தில் தான் கூலி வேலை செய்து வருவதாகவும், அ.சா.1 ஐ தெரியும் என்றும், இவ்வழக்கின் எதிரியை தெரியும் என்றும், அவர்கள் இருவரும் தனது ஊரை சேர்ந்தவர்கள் என்றும்,இவ்வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(3) அ.சா.3 திரு.மோகன் தனது சாட்சியத்தில் அ.சா.1 ஐ தெரியும் என்றும், இவ்வழக்கின் எதிரியை தெரியும் என்றும், அவர்கள் இருவரும் தனது உறவினர்கள் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை சாட்சியம் அளித்துள்ளார்.

4-(4) அ.சா.4 திரு.மாரிமுத்து தனது சாட்சியத்தில், அ.சா.1 ஐ தெரியும் என்றும், இவ்வழக்கின் எதிரியை தெரியும் என்றும், அவர்கள் இருவரும் தனது ஊரை சேர்ந்தவர்கள் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் சம்பவ சமயத்தில் வருசநாட்டில் இருந்ததாகவும், போலீசார் தன்னை

விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(5) அ.சா.5 திரு.பவுன்முத்து தனது சாட்சியத்தில், அ.சா.1 ஐ தெரியும் என்றும், இவ்வழக்கின் எதிரியை தெரியும் என்றும், அவர்கள் இருவரும் தனது பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(6) அ.சா.6 திருமதி.சாரா தனது சாட்சியத்தில், தான் தற்போது திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் மூத்த உதவி மருத்துவராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 16.01.2016 அன்று மாலை 04.40 மணியளவில் அதே மருத்துவமனையில் பணியிலிருந்த போது கணேஷ்காமு என்பவரை அவரது சித்தப்பா மருத்துவ சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார் என்றும், பரிசோதித்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார் என்றும் அவர் தன்னை அடையாளம் தெரிந்த 4 நபர்கள் கம்பு, கத்தி, செங்கல் வைத்து ஆர்91 காலனி ரேசன்கடை அருகில் தாக்கியதாக கூறினார் என்றும், அவருக்கு நெஞ்சின் அருகிலும், வலது பக்க வயிற்றிலும், இடது கை முட்டியிலும், இரு கால் முட்டியிலும், வலது கணுக்காலிலும் இடது பாதத்திலும் சிராய்ப்பு காயங்களும், வலது கன்னத்திலும் வலது மேல் உதட்டிலும் சிதைவு காயங்கள் இருந்தது என்றும் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதிக்க கூறப்பட்டது மற்றும் மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக எடுத்துரைக்கப்பட்டது என்றும், அவர் மேல் சிகிச்கைக்கு மேற்படி மருத்துவமனைக்கு செல்லாததால் அவரது காயத்தின் தன்மை குறித்து சான்று அளிக்க முடியாது என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டு விபத்து பதிவேடு வழங்கியதாகவும், அசா.1ன் விபத்து பதிவேடு அசாஆ.2 என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(7) அ.சா.7 திரு.முத்தையா தனது சாட்சியத்தில், இவ்வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(8) அ.சா.8 திரு.பாஸ்கரன் தனது சாட்சியத்தில், சார்பு ஆய்வாளராக

பணிபுரிந்து பணிஓய்வு பெற்று தற்போது மதுரையில் குடியிருந்து வருவதாகவும், கடந்த 2016ம் ஆண்டு தான் கிருஷ்ணன் கோவில் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது தன்னுடன் பணிபுரிந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமமூர்த்தி(இறப்பு) 16.01.2016 அன்று காவல்நிலைய பொறுப்பிலிருந்தபோது கணேஷ்காமு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று நிலைய குற்ற எண்.17/2016 பிரிவுகள்.323, 324, 506(2) இதச பிரகாரம் வழக்கு பதிவு செய்து மேற்படி வாதிக்கு மருத்துவ நமுணா 1/GM/P6PS/2016 நாள் 16.01.2016 பிரகாரம் திருவில்லிபுத்தர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துள்ளார் என்றும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 என்றும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகார்மனுவையும் இணைத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார் என்றும், அன்றைய தினம் 16.01.2016 அன்று தான் இவ்வழக்கினை புலன் விசாணைக்கு எடுத்துக்கொண்டு 17.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முத்தையா, தாமரைச்செல்வன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் அசாஆ.4 என்றும், மாதிரி வரைபடம் அசாஆ.5 என்றும், பின்னர் சாட்சிகள் கணேஷ்காமு, ராமர், மோகன், மாரிமுத்து, பவுன் முத்து, ஊரணிமுத்து, முத்தையா, தாமரைச்செல்வன், சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமமூர்த்தி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தனது விசாரணையிலிருந்தும் ரகசிய விசாரணையிலிருந்து இவ்வழக்கின் சம்பவத்தில் அதிஷ்டகுமார் என்பவர் மட்டுமே ஈடுபட்டுள்ளார் என்று முடிவு செய்து இவ்வழக்கிற்கு தொடர்பு இல்லாத ராமர், ஜெயராம், மற்றும் முனியப்பன் ஆகியோர்களை இவ்வழக்கிலிருந்து நீக்கம் செய்து அதன் தனி அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், எதிரிகள் நீக்குதல் அறிக்கை அசாஆ.6 என்றும், பின்னர் இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் அவர் விதுநகர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சிஆர்எம்பி எண்.537/2016 ன்படி முன்ஜாமீன் பெற்றுவிட்டதால் தனியாக கைது செய்யவில்லை என்றும், பின்னர் தான் பணியிட மாறுதலில் மதுரை மாநகருக்கு சென்றுவிட்டதாகவும், தான் பணியிட மாறுதலில்

சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை காவல்நிலையத்தில் ஒப்படைத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

4-(9) அ.சா.9 திரு.ராஜவேல் தனது சாட்சியத்தில், தான் காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது ஜமீன்நத்தம்பட்டியில் குடியிருந்து வருவதாகவும், கடந்த 16.01.2016 அன்று சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமமூர்த்தி என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சார்பு ஆய்வாளர் பாஸ்கரன் முதல் விசாரணை முடித்து வைத்த குற்ற எண்.17/2016 பிரிவுகள்.323, 324, 506(2) இதச வழக்கினை 25.02.2016 அன்று தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று பார்த்தபோது சார்பு ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் வரைந்த நிலையிலேயே இருந்ததால் தான் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றும், சார்பு ஆவ்யாளர் ஏற்கனவே விசாரித்த சாட்சிகளை தான் விசாரித்தபோது சார்பு ஆய்வாளரிடம் கூறிய அதே சங்கதிகளை தன்னிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், பின்னர் 09.03.2016 அன்று காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் சாரா அவர்களை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் அன்றைய தினமே எனது விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள்.323, 324, 506(2) இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கைக் தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

5) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரி சாட்சியை பொய் எனக் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார். இவ்வழக்கில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) தீர்வுக்குரிய பிரச்சனை :–

அரசு தரப்பால் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7) கடந்த 16.01.2016 ம் தேதி 15.00 மணிக்கு புகார்தாரரானவர் தனது ஊருக்கு அருகில் உள்ள R–91 காலனியில் உள்ள ரேசன் கடை முன்பு நடந்து வந்த போது அவருக்கு எதிரே வந்த எதிரியானவர் புகார்தாரரைப் பார்த்து எப்ப பார்த்தாலும் ஊருக்குள் ஏதாவது பிரச்சனை பண்ணிக்கிட்டு இருக்க அப்படின்னு சொல்லி வாதியை கையால் நெஞ்சில் குத்தியும் கீழே தள்ளிவிட்டு காயப்படுத்தியும் கீழே கிடந்த செங்கலை எடுத்து புகார்தாரரின் வலது கண்ணுக்கு கீழ் அடித்து காயப்படுத்தியும் சாட்சிகள் விலக்கியபோது எதிரியானவர் புகார்தாரரை கொலை மிரட்டல் விடுத்துச் சென்றார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரிகளை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில் புகார்தாரருக்கு வழங்கியதாக கூறப்படும் விபத்து பதிவேட்டில் விபத்து பதிவேடு எண் குறிப்பிடப்படவில்லை என்றும், புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தனது சாட்சியத்தில் புகார்தாரருக்கு ஏற்பட்ட காயங்களானது அவர் வாகனத்திலிருந்து கீழே விழுந்திருந்தாலும் ஏற்பட்டிருக்க வாய்புள்ளது என்று கூறியிருந்தாலும், இவ்வழக்கில் புகாரில் யாரும் அறிவேன் சாட்சி கையெழுதது செய்யவில்லை என்றும், புகாரில் அடித்தல் திருத்தல்கள் காணப்படுவதாகவும், அதனை இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியும் ஒப்புக்கொண்டுள்ளதாகவும், புகார்தாரர் தனக்கும் எதிரிக்கும் எந்தவித முன்விரோதமும் இல்லை என்று கூறியுள்ளதாகவும், ஆனால் போலீசார் விசாரணையில், எதிரிக்கும் புகார்தாரருக்கும் முன்விரோதம்

உள்ளது தெரிய வந்ததாகவும், இவ்வழக்கில் புகார்தாரரை தாக்க பயன்படுத்தியதாக கூறப்படும் செங்கலானது கைப்பற்றப்படவில்லை என்றும், இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகள் அனைத்தும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாகவும், இவ்வழக்கில் சரவர புலன்விசாரணை மேற்கொள்ளப்படாமல் எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறும் கோரி வாதிட்டார்.

10. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 16.01.2016 அன்று தங்கள் ஊர் ரேசன் கடை அருகே சென்று கொண்டிருந்த போது தன்னை இவ்வழக்கின் எதிரி வழிமறித்து தனது நெஞ்சில் கையை வைத்து குத்தி தள்ளிவிட்டதாகவும், தான் சிமெண்ட் பிளாக்கின் மீது விழுந்துவிட்டதாகவும், தான் எந்திரிக்க முயற்சித்த போது இராமர், ஜெயராமன், முனியப்பன் ஆகியோர் தன்னை தாக்கியதாகவும், ராமர் தனது கையில் வைத்திருந்த அரிவாளை எடுத்து பின்புறமாக திருப்பி தனது வலது கண்ணில் அருவாள் வைத்து அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், முனியப்பன் செங்கலை எடுத்து தனது முதுகில் அடித்ததாகவும், ஜெயராமன் கையில் வைத்திருந்த கம்பால் தனது முதுகில் மாறி மாறி அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், அப்போது அருகிலிருந்த ஊர்காரர்கள் விலக்கிவிடவும், எதிரிகள் தன்னை பார்த்து கொலைமிரட்டல் விடுத்ததாகவும், தான் கிருஷ்ணன்கோவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், காவல் நிலையத்தில் காயம்பட்ட தனக்கு மருத்துவ நமூனா கொடுத்து திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் கூறியுள்ளார்.

11. மேலும் அவரது குறுக்கு விசாரணையில், இவ்வழக்கின் எதிரி அதிஷ்டகுமாருக்கும் தனக்கும் தனிப்பட்ட முன்விரோதம் எதுவுமில்லை என்றும், தான் வழக்கறிஞர் என்பதால் தான் அடிக்கடி காவல்நிலையம் செல்வது வழக்கம் என்றும், இவ்வழக்கு பதிவு செய்யப்பட்ட போது தான் சட்டக்கல்லூரி மாணவராக இருந்ததாகவும், புகார் மனுவை தான் தான் எழுதிக் கொடுத்ததாகவும், புகார் மனுவில்

எதிரியின் பெயரை குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் அவரது தகப்பனார் பெயர் தனக்கு தெரியாது என்றும், எதிரியின் பெயரை குறிப்பிட்டு அவர் தன்னை தாக்கியதாக புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றும், அனைவரும் சேர்ந்து தாக்கினார்கள் என்று கூறியுள்ளதாகவும், அதிஷ்டகுமார் தாக்கியத்தில் தனக்கு என்ன வகையான காயம் ஏற்பட்டது என்பது பற்றி குறிப்பிட்டு தான் கூறவில்லை என்றும், ஆனால் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் அது பற்றி குறிப்பிட்டுள்ளதாகவும், சம்பவம் நடந்த இடத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் காவல் நிலையம் உள்ளதாகவும், புகார் மனுவானது சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்திலிருந்து 1–1/4 மணி நேரம் காலதாமதாக கொடுக்கப்பட்டுள்ளதாகவும், தான் சம்பவம் நடந்த இடத்திலிருந்து நடந்து சென்றதால், மேற்படி தாமதம் ஏற்பட்டதாகவும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விபரம் மறுநாள் தான் தனக்கு தெரியும் என்றும், மேற்படி புகார் கொடுத்த பின்னர் எத்தனை மணிக்கு தான் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார் என்பது பற்றி தான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றும், தான் தானாகவே மருத்துவமனைக்கு சென்றதாகவும், போலீசார் தன்னை சம்பவம் நடந்த மறுநாள் விசாரித்ததாகவும், மருத்துவரிடம் தான் அடையாளம் தெரிந்த நபர்கள் தாக்கியதாக தான் கூறியதாகவும், அவர்களது பெயர்களை சொன்னதாகவும், சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியானது தைப் பொங்கல் என்றும், சம்பவ சமயத்தில் தனக்கு மது அருந்தும் பழக்கம் கிடையாது என்றும், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள நபர்கள் பற்றி தனது புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ, போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றும், இவ்வழக்கின் எதிரி வாய்மொழியாக தான் தன்னை மிரட்டியதாகவும், போலீசார் கடந்த 16.01.2016 அன்று ஒரு தனி அறிக்கையை தாக்கல் செய்து அதில் தான் உண்மை சங்கதிகளை மறைத்து தான் பொய்யாக புகார் கொடுத்திருப்பதாக தெரிவித்து இவ்வழக்கின் 1 முதல் 3 எதிரிகளை இவ்வழக்கிலிருந்து நீக்கியுள்ள விபரம் தனக்கு தெரியும் என்றும், போலீசார் ஒருதலைபட்சமாக செயல்பட்டு அவர்களை நீக்கியுள்ளதாகவும்,

இவ்வழக்கின் எதிரி தனது நெஞ்சில் கையை வைத்து தான் குத்தினார் என்றும், செங்களால் வைத்து தாக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

12. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள், அ.சா.1யும், இவ்வழக்கின் எதிரியையும் தெரியும் என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

13. மருத்துவரான அ.சா.6 தனது சாட்சியத்தில், கடந்த 16.01.2016 அன்று மாலை 04.40 மணி அளவில் அ.சா.1யை அவரது சித்தப்பா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்ததாகவும், அவர் சுயநினைவுடன் இருந்ததாகவும், அடையாளம் தெரிந்த 4 நபர்கள் கம்பு, கத்தி, செங்கல் வைத்து தாக்கியதாக கூறியதாகவும், அவருக்கு நெஞ்சிலும், வலது பக்க வயிற்றிலும் இடது கை முட்டியிலும், இருகால் முட்டியிலும், வலது கணுக்காலிலும், இடது பாதத்திலும் சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டதாகவும், வலது மேல் உதட்டில் சிதைவு காயங்கள் இருந்ததாகவும், அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து உள் நோயாளியாக அனுமதிக்க கூறப்பட்டதாகவும், மேல் சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு எடுத்துரைக்கப்பட்டதாகவும், அவர் அங்கு செல்லாததால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க முடியாது என்று விபத்து பதிவேடு வழங்கியதாக கூறியுள்ளார்.

14. மேலும் அவரது குறுக்கு விசாரணையில், போலீசார் விசாரணையில் அ.சா.1யை மருத்துவமனைக்கு யார் அழைத்து வந்தார்கள் என்பது பற்றி

குறிப்பிடவில்லை என்றும், விபத்து பதிவேட்டில் அது பற்றி குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்படி அ.சா.1 க்கு ஏற்பட்டதாக கூறியுள்ள சிதைவு காயம் பற்றி போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றும், மேற்படி அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் தொடர்பாக விபத்து பதிவேடு தவிர வேறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், அ.சா.1 க்கு ஏற்பட்ட காயமானது அவர் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று கீழே விழுந்திருந்தாலும் ஏற்பட வாய்புள்ளது என்றும், விபத்து பதிவேட்டில் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடமானது எந்த ஊர் என்று குறிப்பிடவில்லை என்றும், தாக்கியதாக கூறப்படும் நபர்களின் பெயர்களை விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றும், அ.சா.1 யை சிகிச்சைகாக அவரது சித்தப்பா சுந்தரராஜ் என்பவர் அழைத்து வந்ததாகவும், அ.சா.1 மருத்துவ நமூனா எதுவும் கொண்டுவரவில்லை என்றும், அ.சா.1 வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று அன்றே சென்றுவிட்டதாகவும், அது பற்றி விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றும், போலீசார் விசாரணையிலும் தான் அது பற்றி கூறவில்லை என்றும், அ.சா.1 யை 16.01.2016 அன்றே இராஜாஜி மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறியதாகவும், ஆனால் அவர் அங்கு செல்லவில்லை என்றும், அ.சா.1 க்கு சிறுகாயங்கள் தான் இருந்ததாகவும், ஆனால் முகத்தில் காயம் ஏற்பட்டிருந்ததால், ஸ்கேன் செய்வதற்காக மதுரை மருத்துவமனைக்கு பரிந்துரைத்ததாகவும், விபத்து பதிவேடு வரிசை எண் பற்றி குறிப்பிடவில்லை என்றும், மருத்துவமனை எண் தான் குறிப்பிட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

15. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.7 தனது சாட்சியத்தில், இவ்வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை என்று கூறி அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

16. அ.சா.8 தனது சாட்சியத்தில், கடந்த 2016ம் ஆண்டு தான் கிருஷ்ணன்கோவில் காவல் நிலையத்தில், சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போது, அன்று தன்னுடன் பணியில் இருந்த சார்பு ஆய்வாளர் ராமமூர்த்தி என்பவர் 16.01.2016 அன்று காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.17/2016 ஆக வழக்கு பதிவு செய்ததாகவும், அ.சா.1க்கு மருத்துவ நமூனா கொடுத்து திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அன்றைய தினமே 16.01.2016 அன்று இவ்வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தனது விசாரணையில் இவ்வழக்கின் எதிரி அதிஷ்டக்குமார் என்பவர் மட்டும் ஈடுபட்டுள்ளார் என்று தெரியவந்ததால், இவ்வழக்கில் தொடர்பில்லாத ராமர், ஜெயராம், மற்றும் முனியப்பன் ஆகியோர்களை இவ்வழக்கிலிருந்து நீக்கம் செய்து தனியறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், இவ்வழக்கின் எதிரி முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை என்றும், தான் பணிமாறுதலில் சென்றால் வழக்கு கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாக கூறியுள்ளார்.

17. மேலும் அவரது குறுக்கு விசாரணையில், ஏற்கனவே எழுதப்பட்ட புகார் மனுவை அ.சா.1 காவல் நிலையத்தில் கடந்த 16.01.2016 அன்று மாலை 16.15 மணிக்கு கொடுத்துள்ளதாகவும், புகார் மனுவில் அவர் எந்த மொழியில் கையெழுத்து செய்துள்ளார் என்பது பற்றி சரியாக தெரியவில்லை என்றும், புகார் மனுவில் சம்பவயிடம், தேதி, மற்றும் நேரம் வேறு பேனாவால் எழுதப்பட்டுள்ளதாகவும், புகார் மனுவில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள தேதி திருத்தப்பட்டுள்ளதாகவும், புகார் மனுவில் புகார்தாரரின் கையெழுத்திற்கு கீழ் உள்ள தேதியானது 18.01.2015 என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், புகார் மனுவில் அறிவேன் சாட்சியாக யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றும், இவ்வழக்கின் புகார் மனு மற்றும் முதல்

தகவல் அறிக்கையில் இவ்வழக்கின் எதிரியின் தகப்பனார் பெயர் மற்றும் முகவரி போன்ற விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றும், இவ்வழக்கில் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் என்றும், இருசக்கர வாகனத்தில் வந்தால் 1/4 மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றும், இவ்வழக்கில் 1–1/4 மணி நேரம் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி காலதாமதம் பற்றி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும், இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பு இவ்வழக்கின் எதிரிக்கும் புகார்தாரருக்கும் திருவிழாவில் முன்விரோதம் ஏற்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கு சம்பவத்திற்கு முன் புகார்தாரர் எதிரி மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், இவ்வழக்கின் எதிரியின் பெயரை குறிப்பிட்டு அவர் தாக்கியதாக முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவில் குறிப்பிடப்படவில்லை என்றும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில் பொதுநாட்குறிப்பேட்டில் இவ்வழக்கு சம்பந்தமாக குறிப்பிடப்பட்டது பற்றி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும், இவ்வழக்கு சம்பவத்தை பார்த்த கண்ணுற்ற சாட்சிகளின் விபரங்களை புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும், அ.சா.1 க்கு எத்தனை மணிக்கு மருத்துவ நமூனா கொடுத்து அவர் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்பது பற்றி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும், மேற்படி மருத்துவ நமூனா இவ்வழக்கின் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அ.சா.1 எத்தனை நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்பது பற்றி தனக்கு நியாபகம் இல்லை என்றும், அ.சா.1 க்கு சிகிச்சை அளித்தது சம்பந்தமாக மருத்துவ ஆணவங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது பற்றி இவ்வழக்கினை மேல்விசாரணை செய்த சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும் என்றும், சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியில் இவ்வழக்கின் எதிரியை புகார்தாரர் தாக்கியதாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், இவ்வழக்கு சம்பவயிடத்தில் எதிரி அ.சா.1 யை தாக்கியதாக ஆதாரங்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும், பார்வை மகஜரிலும் அது பற்றி

குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கிலிருந்து 1 முதல் 3 எதிரிகளை நீக்கம் செய்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

18. அ.சா.9 தனது சாட்சியத்தில், அ.சா.8 முதல் விசாரணை முடித்து வைத்திருந்த வழக்கு கோப்பை கடந்த 25.02.2016 அன்று தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பயிடம் சென்று பார்த்த போது, அ.சா.8 சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைந்த பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் உள்ள நிலையிலேயே இருந்ததால், தனியாக பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றும், அ.சா.8 ஏற்கனவே விசாரித்த போது சாட்சிகள் அவரிடம் கூறிய சங்கதிகளையே தன்னிடமும் சொன்னதால், தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், பின்னர் 09.03.2016 அன்று திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் சாரா அவர்களை விசாரித்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் அன்றைய தினமே எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக கூறியுள்ளார்.

19. மேலும் அவரது குறுக்கு விசாரணையில், புகார் மனுவில் எதிரியின் முகவரி மற்றும் தகப்பனார் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவில் இவ்வழக்கின் எதிரி எதை வைத்து தாக்கினார் என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை என்றும், தனது வாக்குமூலத்தில் தான் குறிப்பிட்டுள்ளதாகவும், முனியப்பன் என்பவர் தான் செங்கலை வைத்து தாக்கியதாக குறிப்பிட்டுள்ளதாகவும், எதிரி தாக்கியதாக குறிப்பிடப்படவில்லை என்றும், போலீசார் விசாரணையின் போதும் எதிரி தன்னை செங்கலை வைத்து தாக்கியதாக அ.சா.1 வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், ஆனால் இவ்வழக்கின் எதிரி தான் செங்கலை வைத்து தாக்கியதாக குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளதாகவும், எதிரி தாக்கியதாக கூறப்படும் மேற்படி பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், இவ்வழக்கில் புகார் கொடுப்பதற்கு ஏற்பட்ட 1–1/4 மணி நேரம் காலதாமதம் பற்றி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும், புகார்தாரரை

எத்தனை மணிக்கு மருத்துவ நமூனா மூலம் மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்பது பற்றி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும் மேற்படி மருத்துவ நமூனா இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், புகார்தாரருக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் போன்றவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், விபத்து பதிவேட்டில் விபத்து பதிவேடு வரிசை எண் குறிப்பிடப்படவில்லை என்றும், அ.சா1 க்கு சிகிச்சை அளித்ததாக கூறப்படும் மருத்துவரை 53 நாட்கள் கழித்து தான் விசாரணை செய்துள்ளதாகவும், சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியில் இவ்வழக்கின் எதிரியை புகார்தாரர் தாக்கியதாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 4 எதிரிகளில் 3 எதிரிகளை உண்மைக்கு புறம்பாக புகார்தாரர் இவ்வழக்கில் சேர்த்திருப்பதாக கூறி அவர்களை இவ்வழக்கிலிருந்து நீக்கியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

20. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததிலிருந்து, இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், புகார் மனுவில் எதிரியின் பெயரை குறிப்பிட்டுள்ளதாகவும், அவரது தகப்பனார் பெயர் மற்றும் விபரங்களை குறிப்பிடவில்லை என்றும், எதிரியின் பெயரை குறிப்பிட்டு அவர் தன்னை தாக்கியதாக புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றும், அனைவரும் சேர்ந்து தாக்கினார்கள் என்று கூறியுள்ளதாகவும், அதிஷ்டகுமார் தாக்கியத்தில் தனக்கு என்ன வகையான காயம் ஏற்பட்டது என்பது பற்றி புகார் மனுவில் குறிப்பிட்டு தான் கூறவில்லை என்றும், போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் மட்டும் அது பற்றி குறிப்பிட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் எதிரி தனது நெஞ்சில் கையை வைத்து தான் குத்தியதாகவும், செங்கலை வைத்து தாக்கவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் அதற்கு முரணாக இவ்வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில் எதிரி அதிஷ்டக்குமார் அ.சா.1 யை கையால் நெஞ்சில் குத்தி, கீழே தள்ளிவிட்டு காயப்படுத்தி கீழே கிடந்த செல்கலை எடுத்து அ.சா.1 ன் வலது கண்ணுக்கு கீழ் அடித்து காயப்படுத்தியதாக கூறியுள்ளார். மேலும் அ.சா.1

இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள நபர்கள் பற்றி தனது புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ, போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் இவ்வழக்கு சம்பந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர். அதுமட்டுமின்றி அ.சா.1 மருத்துவமனைக்கு தானாகவே சென்றதாக கூறியுள்ள நிலையில், அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரான அ.சா.6 தனது சாட்சியத்தில், அ.சா.1 யை அவரது சித்தப்பா மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாக கூறியுள்ளார். மேலும் மருத்துவரான அசா.6 தனது முதல் விசாரணையில் அ.சா1 யை உள்நோயாளியாக அனுமதித்ததாக கூறிவிட்டு தனது குறுக்கு விசாரணையில், அ.சா.1 வெளிநோயாளியாக சிகச்சை பெற்று அன்றே சென்றுவிட்டதாகவும், அது பற்றி விபத்து பதிவேட்டிலும், போலீசார் விசாரணையிலும் தான் சொல்லவில்லை என்றும், மேற்படி அ.சா.1 க்கு ஏற்பட்டதாக கூறியுள்ள சிதைவு காயம் பற்றி போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றும், மேலும் விபத்து பதிவேட்டில் விபத்து பதிவேடு எண் குறிப்பிடப்படவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்.

21. மேலும் இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சியான அசா.7 ம் பார்வை மகஜரிலுள்ள கையெழுதது தன்னுடையது இல்லை என்ற கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அவரது சாட்சியத்திலிருந்து உண்மையில், போலீசுார் சமபவயிடம் சென்று பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் தான் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததார்காளா என்பது குறித்த நியமான சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்க்கு ஏற்படுத்துகிறது. மேலும் இவ்வழக்கின் முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட அதிகாரியான அ.சா.8 ம் புகார் மனுவில் சம்பவயிடம், தேதி, மற்றும் நேரம் வேறு பேனாவால் எழுதப்பட்டுள்ளதாகவும், புகார் மனுவில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள தேதி திருத்தப்பட்டுள்ளதாகவும், புகார் மனுவில்

புகார்தாரரின் கையெழுத்திற்கு கீழ் உள்ள தேதியானது 18.01.2015 என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், புகார் மனுவில் அறிவேன் சாட்சியாக யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றும், இவ்வழக்கின் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையில் இவ்வழக்கின் எதிரியின் தகப்பனார் பெயர் மற்றும் முகவரி போன்ற விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள புகார் மனுவை ஆராய்கையிலும், மேற்படி குறிப்பிடப்படடுள்ளவாறு தேதிகள் அடித்தல் திருத்தல்களுடன் காண்பபடுகிறது. சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதி, நேரம் மற்றும் இடமும் வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது புலன்படுகிறது. அதுமட்டுமின்றி புகார்மனுவில் அசா.1 ன் கையெழுத்திற்கு கீழ் 18.01.2016 குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளிலிருந்து உண்மையில் புகார் மனு எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்பது குறித்த நியாமான சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது

22. மேலும் அ.சா.8 தனது சாட்சியத்தில், இவ்வழக்கின் எதிரியின் பெயரை குறிப்பிட்டு அவர் தாக்கியதாக முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவில் குறிப்பிடப்படவில்லை என்றும் எதிரி அ.சா.1யை தாக்கியதாற்காக பொருள்கள் எதுவும் சம்பவியடத்தில் இல்லை என்றும், அது பற்றி பார்வை மகஜரில் குறிப்பிடப்படடுள்ளதாகவும் இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள கண்ணுற்ற சாட்சிகள் பற்றி புகார் மனுவில் குறிப்பிடப்பட்டவில்லை என்றும், ஒப்புக்கொண்டுள்ளார். இவ்வழக்கின் மேல்விசாரணை மேற்கொண்ட அதிகாரியான அ.சா.9ம் புகார் மனுவில் எதிரியின் முகவரி மற்றும் தகப்பனார் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவில் இவ்வழக்கின் எதிரி எதை வைத்து தாக்கினார் என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை என்றும், தனது வாக்குமூலத்தில் தான் குறிப்பிட்டுள்ளதாகவும், முனியப்பன் என்பவர் தான் செங்கலை வைத்து தாக்கியதாக குறிப்பிட்டுள்ளதாகவும், எதிரி தாக்கியதாக குறிப்பிடப்படவில்லை என்றும், போலீசார் விசாரணையின் போதும் எதிரி தன்னை செங்கலை வைத்து தாக்கியதாக அ.சா.1 வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும்,

ஆனால் இவ்வழக்கின் எதிரி தான் செங்கலை வைத்து தாக்கியதாக குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், எதிரி தாக்கியதாக கூறப்படும் மேற்படி பொருளையும் கைப்பற்றவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்.

23. மேற்படி சாட்சிகளே முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2 முதல் அசா. 5 வரையிலான சாட்சிகளும் அரச தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்தை கருத்தில்கொண்டும், மேற்படி விவரிக்கப்பட்ட காரணங்களை கருத்தில் கொண்டும் எதிரி தான் மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியில் அசா.1 யை தககாத வார்த்தைதகளால் பேசி, தாக்கி காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார் என்று குற்ற இறுதி அறிக்கையில் கூறப்படடுள்ள சங்கதிகளை அரசு தரப்பு தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனால் சந்தேகத்தின்பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது

. 24. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது இதச பிரிவுகள் 323, 324, 506(2)–ன் கீழான குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

25. இவ்வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால்

நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 08-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.கணேஷ்காமு |
| அ.சா.2 | திரு.ராமர் |
| அ.சா.3 | திரு.மோகன் |
| அ.சா.4 | திரு.மாரிமுத்து |
| அ.சா.5 | திரு.பவுன்முத்து |
| அ.சா.6 | திருமதி.சாரா |
| அ.சா.7 | திரு.முத்தையா |
| அ.சா.8 | திரு.பாஸ்கரன் |
| அ.சா.9 | திரு.ராஜவேல் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அசாஆ.1 | புகார் மனு |
| அ.சாஆ.2 | அ.சா.1 ன் விபத்து பதிவேடு |
| அசாஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அசாஆ.4 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | வரைபடம் |
| அ.சா.ஆ.6 | எதிரிகள் நீக்குதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்** – இல்லை -

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்படவில்லை. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |